மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு. M. ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., LLM.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
2026– ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07–ஆம் நாள் சனிக்கிழமை
இடைக்கால மனுஎண்.9/2026 ல் அசல் வழக்கு எண்.22/2021
**CNR.No. TNTT–08000090–2019**

1.அப்துல் முனாப்
2.செய்யது அலி பாத்திமா ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

கருப்பசாமி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.காந்தி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஜெகநாதன் ஜெபராஜா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வழக்கறிஞர்கள் செய்து கொண்ட வாத உரைகளை கேட்டறிந்தும், மனு சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று (07.03.2026)இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும் ...

**உத்தரவு**

நீதிமன்ற ஆணையரை மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் அளிக்க அனுமதி அளிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் ஆர்டர் 16 விதி 1 மற்றும் பிரிவு 151 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.மனு சுருக்கம்:**

தாவா சொத்துக்களை அளந்து அறிக்கை தாக்கல் செய்வதற்கு மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் வழக்கறிஞர் திரு. M.A.ஷாஜஹான் அவர்கள் ஆணையராக நியமித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஆணையர் தபசில் சொத்தினை சர்வேயர் உதவியுடன் அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். ஆணையர் அறிக்கையில் தபசில் சொத்துக்களுக்கு நீளம், அகலம் ஆகியவற்றிக்கான அளவீடுகள் குறிக்கப்பட்டுள்ளன. அசல் வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் அளவீடுகள் கிடையாது. வழக்குரை

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.07 20:15:20 +0530

ஆவணங்களின் அடிப்படையில் அளவீடு செய்யாமல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சங்கதிகள் சம்பந்தமாக ஆணையரை விசாரணை செய்ய வேண்டி இருப்பதால் ஆணையரை விசாரணை செய்ய அனுமதியளிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3.எதிருரை சுருக்கம்</u>:**

அ) மனு சங்கதிகள் மறுக்கப்பட்டு பொய் என்று சொல்லப்பட்டுள்ளன. எதிர்மனுதார்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் சொத்தின் விஸ்தீரணமும் மற்றும் குறிப்பிட்ட புல எண்ணில் அது அமைந்திருக்கும் இருப்பிடமும் (Lie and location) தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தபசில் சொத்துக்களை நில அளவர் உதவியுடன் ஆணையர் அளந்து அளவுகளை நிர்ணயம் செய்துள்ளார். இதில் எந்தவித தவறும் கிடையாது. ஆணையர் நியமனம் கோரி எதிர்மனுதார் தாக்கல் செய்திருந்த இடை நிலை மனு எண்:2/2022 மனுவிற்கு மனுதாரர்கள் தாக்கல் செய்திருந்த எதிர் உரையில் எதிர்மனுதாரரின் ஆவணங்களின் அளவுகள் கொடுக்கப்படவில்லை என்பதால் சொத்தின் அமைவிடத்தையும், அளவுகளையும் ஆணையர் அறிய முடியாது என்று மனுதாரர்கள் ஆட்சேபிக்கவில்லை. மாறாக, ஆணையர் நியமன மனு தபசிலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் மனுதாரர்கள் கம்பிவேலி அடைப்புக்கு வெளியே உள்ளன என்று எதிர் உரையில் கூறியுள்ளனர்.

ஆ)ஆணையர் நியமன உத்திரவினை ஆட்சேபித்து மனுதாரர்கள் எவ்வித சட்டரீதியான மேல் நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. ஆணையர் நியமன உத்திரவை மனுதாரர்கள் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டு, ஆணையர் ஆய்விலும் கலந்து கொண்ட பின்னர், ஆணையர் நில அளவர் உதவியுடன் வழக்கு சொத்துக்களை அளந்து, வழக்கு சொத்துக்கள் மனுதாரர்கள் கம்பிவேலி அடைப்புக்குள் மனுதார்கள் ஆக்கிரமிப்பில்தான் உள்ளன என்று தெளிவாக அறிக்கை தாக்கல் செய்த பின்னர், ஆணையர் அறிக்கை மனுதார்களுக்கு எதிராக அமைந்துள்ளது என்பதற்காக ஆணையரை திறந்த நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்க அனுமதி கேட்டிருப்பது ஏற்புடையதில்லை. ஆணையர் என்பவர் நீதிமன்றத்தின் அலுவலர் ஆவார். விசாரணை என்ற பெயரில்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.07 20:15:24 +0530

ஆணையருக்கு தேவையில்லாமல் நெருக்கடியை ஏற்படுத்த மனுதாரர்கள் அனுமதிக்க முடியாது.

இ) தாவா வழக்கில் இருதரப்பிலும் சாட்சி விசாரணைகள் நிறைவுற்ற நிலையில் வழக்கை முடிவுக்கு கொண்டு வரவிடாமல் இழுத்தடிக்க வேண்டுமென்ற தீய நோக்கத்திலேயே மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>4.தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை</u>**

நீதிமன்ற ஆணையரை மனுதாரர்கள் தரப்பில் சாட்சியாக விசாரிக்க அனுமதி வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1கீழ் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா? அல்லது இல்லையா? என்பது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

**<u>தீர்வு</u>**

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கு எண்.22/2021ன் பிரதிவாதிகள். எதிர்மனுதாரர் வாதி ஆவார். அசல் வழக்கானது எதிர்மனுதாரரால் மனுதாரர்களுக்கு எதிராக வெள்ளமடம் கிராமம் புல எண்கள்.311/1ல் 1 ஏக்கர் 98 செண்டில் தென்புறம் 73 செண்ட், சர்வே எண்.311/2ல் 2 ஏக்கர் 4 செண்டில் தென்புறம் 24 செண்ட் மற்றும் சர்வே எண். 311/5ல் 2ஏக்கர் 28 செண்டில் வடபுறம் 3 செண்ட் ஆகியவற்றில் அமைந்துள்ள தபசில் சொத்துக்கள் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்வதன் தொடர்ச்சியாக அதன் சுவாதீனத்தினை ஒப்படைக்கக் கோரி விளம்புகை மற்றும் சுவாதீன மீட்புப் பரிகாரம் கோரப்பட்டுள்ளது.

6. இடைநிலை மனு எண்.2/2022ல் கடந்த 25.07.2025ம் தேதி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். அதற்கு இம்மனுவின் மனுதாரர்கள் தரப்பில் 28.08.2025ம் தேதி நீதிமன்ற அலுவலகத்தில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் 1ம் மனுதாரர் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.07 20:15:28 +0530

பி.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. நீதிமன்ற ஆணையர் அறிக்கை, வரைபடம் மற்றும் புல வரைபடம் நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7. மனுதாரர்கள் தரப்பில் மேற்கொண்டு சாட்சியம் அளிப்பதற்காக 17.02.2026 ம் தேதி இறுதியாக வாய்தா ஏற்படுத்தப்பட்ட நிலையில் இம்மனுவானது நீதிமன்ற ஆணையரை மனுதாரர்கள் தரப்பில் சாட்சியாக விசாரிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குரை தபசில் சொத்துக்களை பரிசீலனை செய்கையில் அதன் கிழ மேல் மற்றும் தென்வடல் நீள மற்றும் அகல அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்று அறிய முடிகிறது. ஆனால், தபசில் சொத்தின் சர்வே எண்கள் மற்றும் அதன் நான்கு மால் எல்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. நீதிமன்ற ஆணையரிடம் மனுதாரர்கள் தரப்பில் வாதியின் முன் கிரையதாரரான ஜோசப் சன்னி பெயரில் உள்ள ஆவண எண்.491/1994 ன் படி அளவீடு செய்ய கோரப்பட்டு வாதி தரப்பு ஆட்சேபனையில் அவ்வாறு அளவீடு செய்யப்படவில்லை என்று ஆணையர் அறிக்கை தெரிவிக்கிறது.

8. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனைகள் ஆணையரை விசாரிக்கக் கோரும் போது கருத்தில் கொள்ளப்பட வேண்டும். 1ம் தபசில் அளவீடு செய்ததற்கான எல்கைமால் நிர்ணயம் செய்யப்படவில்லை என்றும் சர்வே எண்.284ல் இருந்து 1மீ வித்தியாசத்துடன் நிர்ணயம் செய்து அளவீடு செய்யப்பட்டுள்ளதாக ஆணையர் அறிக்கை தெரிவிக்கிறது. மனுதாரர்கள் தரப்பில் இதற்கு ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. 1ம் தபசில் சொத்தின் வடக்கு மற்றும் தெற்கு பக்க எல்கை அளவீடு சம்பந்தமாக ஆட்சேபனையில் சொல்லப்பட்டுள்ளது. நீ.ம.சா.1ல் தபசில் சொத்துக்களில் தெற்கில் ஆக்கிரமிப்பு உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது.

9. இத்தகு சூழ்நிலையில் நீதிமன்ற ஆணையரை விசாரித்தால் நீ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் குறித்து நீதிமன்றம் தெளிவிற்கு வர முடியும். இதனால் எதிர்மனுதாரருக்கு எந்த பாதிப்பும் இல்லை. மாறாக, நீதிமன்ற ஆணையரின் முதல் விசாரணையினைத் தொடர்ந்து எதிர்மனுதாரருக்கு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு உள்ளது என்பதை சொல்லத் தேவையில்லை. மேலே

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.03.07 20:15:32 +0530

விவாதித்துள்ள காரணங்களின் அடிப்படையில் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**10. முடிவாக,**

**இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்துப்பார்த்து பிழைத்திருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 0703.2026 அன்று உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.07 20:15:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
ஸ்ரீவைகுண்டம்.

மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் – இல்லை –

மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் – இல்லை –

எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் –இல்லை–

எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் – இல்லை –

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.07 20:15:43 +0530

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
ஸ்ரீவைகுண்டம்.